**03.02.2026**

அ.வ.எண். **117/2021**

<u>பி.சா.**1** சந்திரா குறுக்கு விசாரணை</u>

**1.** வாதி தனுஷம்மாள் எனக்கு உறவினரா என்றால் இல்லை. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவாசொத்தை விற்பனை செய்யகூடாது என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் **2 1/2** செண்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். **2**ம் பிரதிவாதி கல்யாணி எனக்கு என்ன உறவு என்றால் எனது கணவரின் தம்பி மனைவி ஆவார். நானும் **2**ம் பிரதிவாதி கல்யாணியும் சென்னையில்தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கிலிருந்து எனக்கு அழைப்பாணை சென்னை முகவரிக்கு வந்ததா என்றால் ஆமாம்.

**2.** வாதி தனுஷம்மாள் இந்த வழக்கில் நானும், **2**ம் பிரதிவாதி கல்யாணியும் எந்த ஊரில் வசித்து வருகிறோம் என்று கூறியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பழமத்தூர் கிராமத்திற்கு நீதிமன்ற அழைப்பாணை வந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவாசொத்தை விற்பதற்கு முன்பு நான் அதை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அப்போது எனக்கும் வாதி தனுஷம்மாளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அதன்பின்பு வாதியின் வாரிசுகள் பெயரில் நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் கொடுத்தேன். மேற்சொன்ன புகாரின் அடிப்படையில் வாதியின் வாரிசுகளை

காவல்நிலையத்தில் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். அப்போதுதான் எனக்கு இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான்.

**3.** அந்த விசாரணையில் வாதி தனுஷம்மாள் வாரிசுகளை காவல்நிலையத்தில் கைது செய்து விடுவேன் என்று கூறி உட்கார வைத்தார்கள் என்றால் சரிதான். தாவாசொத்தின் ஜக்குபந்தி தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாததால் எனக்கு சொத்தின் நான்கு மால்கள் பற்றி தெரியாது. நானும் 2ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி கணவர் சென்னையில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் பிள்ளைகள் உள்ளார்களா என்றால் எனக்கு 2 குழந்தைகள், 2ம் பிரதிவாதிக்கு 1 மகன் இருந்தார் அவர் இறந்துவிட்டார்.

**4.** 2ம் பிரதிவாதியின் மகன் சென்னையில் தான் பிறந்தாரா என்றால் சரிதான், என்னுடைய குழந்தைகள் அனைவரும் பழமத்தூர் கிராமத்தில்தான் பிறந்தார்கள். எனது குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை அனைத்திலும் சென்னை முகவரிதான் உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தில் என்ன உள்ளது என்றால் கூரை வீடு இடிந்து விட்டது, நான் எனது கணவர் இறந்த பிறகு எனது மகளுடன் சென்னையில் வசித்து வருகிறேன். தாவாசொத்தில் பழைய கூரை வீடு இருந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வரி கட்டி வந்தேன், அந்த ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவில்லை. தாவா சொத்து காலி இடத்தில் கால்வாய் உள்ளதா

என்றால் இல்லை, காலி இடமாகதான் உள்ளது. தாவாசொத்தில் கழிவுநீர் செல்வதற்கு கால்வாய் உள்ளது, தாவாசொத்தில் நான் எந்த காலத்திலும் வசித்தது கிடையாது, அதனால் எந்த விவரமும் தெரியாமல் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

**5**. தாவாசொத்து காலி இடத்திற்கு வடக்கில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தில் உள்ள காலி இடத்தில்தான் நான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். தாவாசொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள வீட்டில் வாதி தனுஷம்மாள் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவாசொத்து எனக்கு அல்லது எனது கணவருக்கு உரிமையான சொத்து என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவாசொத்தை நான் அனுபவித்து வந்ததற்கோ மற்றும் உரிமையுள்ளது என்று காட்டுவதற்கு எதுவும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. தாவாசொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள இடத்தை பாபு என்பவர் வாதி தனுஷம்மாள் என்பவருக்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்துவிட்டார் அதன்பின்பு வாதிதான் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

**6**. பாபு விற்ற நிலத்திற்கு தெற்கு பக்கம்தான் தாவாசொத்து உள்ளது, அந்த சொத்தைதான் வாதி தனுஷம்மாள் தன்னுடைய கிரையதாரரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. தாவாசொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் பாத்தியமும் கிடையாது, நான் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் எண்ணத்தில்தான் இந்த

வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருடன் பிறந்தவர்கள் 4 நபர்கள், அவர்களின் பெயர் வேதாசலம், கிருஷ்ணன், கஜேந்திரன் மற்றும் பெருமாள் ஆவார்கள். மேற்சொன்ன நான்கு நபர்களும் மற்றும் என் கணவர் பாபுவின் வாரிசுகள் என்றால் சரிதான்.

7. கஜேந்திரனுக்கு வாதி தனுஷம்மாள் அனுபவித்து வந்த சொத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான். கஜேந்திரன் இறக்கும்வரை வாதி மற்றும் அவரது வாரிசுதாரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தில் எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் எந்த உரிமையும் கிடையாது, வாதிகளுக்குதான் உரிமை உள்ளது என்றால் சரியல்ல, எனவே தாவாப்படி வாதிகளுக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.